**STARTING TIME 12.40 P.M**

**IN THE COURT OF THE SPECIAL SUBORDINATE JUDGE (LAOP CASES), ARAKKONAM.**

**O.S. No. 52/2026**

Deposition of **P.W.1** witnesses for Plaintiff solemnly affirmed by Tmt. S. Ranjitha, Grade-II Bench Clerk of this court, on 13.03.2026 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : ஜெயசந்திரன் Father's Name : முத்தியால்செட்டி

Address : பெரிய தெரு, மிட்டப்பேட்டை கிராமம் மற்றும் அஞ்சல், அரக்கோணம் வட்டம், ராணிப்பேட்டை மாவட்டம்.

Age : 79

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. என்ன பரிகாரம் கேட்டு இவ்வழக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால், பிரதிவாதிக்கு நான் கொடுத்த பணத்தை திருப்பி கேட்டும் கொடுக்காததால், பணத்தை திருப்பி தர வேண்டி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன். பிரதிவாதியை எனக்கு எப்படி தெரியும் என்றால், எனக்கு தெரிந்த ஆசிரியர் ஒருவர் மூலமாக பழக்கம் ஆகும்.

2. பிரதிவாதிக்கு எவ்வளவு தொகையை கடனாக கொடுத்தேன் என்றால், ரூ.3,00,000/-ஐ கடனாக கொடுத்தேன். பணம் கொடுத்த தேதி என்னவென்றால், 10.05.2016 அன்று கொடுத்தேன். பணத்தை வங்கி மூலமாக அனுப்பினேனா அல்லது ரொக்கமாக கொடுத்தேனா என்றால், ரொக்கமாக தான் கொடுத்தேன்.

பணத்தை யார் முன்னிலையில் பணமாக கொடுத்தேன் என்றால், ஜெயன் என்ற ஆசிரியர் முன்னிலையில் கொடுத்தேன், அவர் பிரதிவாதிக்கு நெருங்கிய நண்பர் ஆவார். அவரை இவ்வழக்கில் சாட்சியாக சேர்த்துள்ளேனா என்றால், இல்லை. இவ்வழக்கில் சாட்சிகள் யாரையும் விசாரிக்க வில்லை என்றால், தேவைப்பட்டால் விசாரிப்பபேன்.

3. பிரதிவாதிக்கும், எனக்கும் ஏற்கனவே கொடுக்கல், வாங்கல் இருந்ததா என்றால், இருந்தது, கைமாற்றாக 10,000/-ம், 20,000/-ம் என வாங்கி சென்று திருப்பி கொடுத்துவிடுவார். கடனுறுதி சீட்டில் வேறு யாராவது சாட்சி கையெழுத்து செய்தார்களா என்றால், தற்போது நினைவில் இல்லை. எத்தனை நபர்கள் சாட்சி கையெழுத்து செய்தார்கள் என்றால், ஒருவர் தான் சாட்சி கையெழுத்து செய்தார்.

4. பிரதிவாதி கடனுறுதி சீட்டில் எத்தனை கையெழுத்து செய்தார் என்றால், கடனை வாங்கிய அன்றும், அதன்பிறகு செல்லு வைத்த இரண்டு முறையும் கையெழுத்து செய்துள்ளார். பிரதிவாதி என்னிடம் வாங்கிய பணத்தை திருப்பி கொடுத்துவிட்டார் என்றும், ஏற்கனவே கொடுக்கல், வாங்கல் இருந்த போது ஏற்பட்ட பிரச்சனையின் காரணமாக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல.

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

வாதி தரப்பில் மறு விசாரணை இல்லை.

**ENDING TIME: 12.51. P.M.**

Special Subordinate Judge

YUVARAJ

Digitally signed by YUVARAJ
Location: Arakkonam
Date: 2026.03.13 15:51:14 +0530